வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**88—**

## மாவட்டக் கல்வி அலுவலகம்

***58098**—**திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் மாவட்டக் கல்வி அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிர்வாக மேம்பாடு கருதி, அரூர் வருவாய் கோட்டத்தை உள்ளடக்கிய நிர்வாக எல்லைக்குள் இயங்கி வரும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைக் கொண்டு அரூர் மாவட்டக் கல்வி அலுவலகத்தைப் புதிதாக ஏற்படுத்துவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

முற்பகல் 9–50

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வியறிவில் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்ட மாவட்டம் தருமபுரி மாவட்டம். வெறும் 50 சதவிகிதமானவர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றுள்ள மாவட்டம். குறிப்பாக அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் ஆகிய எனது பகுதிகளை எடுத்துக் கொண்டால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் 42.6 சதவிகித மாணவர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்கள். மாவட்டத்திலே வறுமைக்கோட்டிற்குக் கீழே அதிகமாக மக்கள் வாழக்கூடிய பகுதியும் இந்த அரூர்

2010 ஏப்ரல் 23]

பகுதி தான். 51.84 சதவிகிதம் மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்று அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரம் கூறுகிறது.

ஏறக்குறைய 98 பஞ்சாயத்துக்கள், 494 கிராமங்களில் சுமார் 3 இலட்சம் மக்களுக்கு சரிபாதி மேலாக ஒரு வேளைக்குக்கூட உண்ண உணவில்லாமல் ஒன்றரை இலட்சம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற, அப்பேர்ப்பட்ட பகுதி அரூர் பகுதி. 2004 ஆம் ஆண்டிலேயே தருமபுரி மாவட்டத்தில் 70,000 ரேஷன் கார்டுகள் சரண்டர் செய்யப்பட்டு வேலைவாய்ப்பிற்காக அண்டை மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்த அவல நிலையையும் இந்த மாவட்டம் சந்தித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் வந்த பிறகு மனிதநேயத்தோடு அவர்களுடைய முயற்சியால் 15, 20 ஆண்டு காலமாக கல்விக்கூடங்களே முளைக்காத எனது அரூர் பகுதியில், மரியாதைக்குரிய அன்றைய மாவட்ட ஆட்சியர் திரு. பங்கஜ்குமார் பன்சால் அவர்கள் இருந்த நேரத்தில் 13 பள்ளிகள், துவக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒரு 15 ஆண்டு காலமாக பள்ளிக்கூடமே முளைக்காத கிராமங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை முடியுங்கள். பிரச்சாரம் பண்ணிக் கொண்டிருந்தால் எப்படி?

**திரு. ப. டில்லி பாபு:** முடித்துவிடுகிறேன். அப்பேர்ப்பட்ட பகுதியில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மாவட்டக் கல்வி அலுவலகம் கொண்டு வரவேண்டுமென்று ஏற்கெனவே நான் வலியுறுத்தியிருந்தேன். ஏறக்குறைய 40 மேல்நிலைப் பள்ளிகள், 30 உயர்நிலைப் பள்ளிகள், 100 நடுநிலைப் பள்ளிகள் ஆக 1,28,000 மாணவர்கள் படிக்கக்கூடிய பகுதி அரூர் பகுதி. 1,450 ஆசிரியர்கள் உள்ள ஒரு பகுதி. தமிழகத்திலேயே 3 மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் இருக்கிறது. அதிலே மிகவும் கீழிருக்கக்கூடிய மாவட்டம் எனது தருமபுரி மாவட்டம். அந்த மாவட்டத்திலே, அரூரிலே, இந்தக் கல்வி மாவட்டத்தை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலோ அல்லது வருகின்ற கல்வியாண்டிலோ தொடங்குவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 23

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் டில்லி பாபு அவர்கள் பொதுவாக தருமபுரி மாவட்டத்தினுடைய கல்வி நிலைமைகள் குறித்து இங்கே அவையில் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துகள் யாராலும் மறுக்கப்பட முடியாத கருத்துகள். அதிகமாக அந்தப் பகுதியிலே பள்ளிகளைத் தொடங்க வேண்டும்; கல்வியறிவிலும், எழுத்தறிவிலும் பின்தங்கியிருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்துகள் இல்லை. குறிப்பாக, நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அவரே குறிப்பிட்டதைப்போல, அதிகமான பள்ளிகளை அங்கே தொடங்குவதற்கும், இருக்கக்கூடிய பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய முயற்சிகள் வருகின்றபோதுகூட தொடர்ச்சியாக அந்தப் பகுதிக்கு அரசு முன்னுரிமை அளித்து வந்திருக்கிறது. எனவே, அரசைப் பொறுத்தமட்டிலே இப்போது இருக்கக்கூடிய முன்னுரிமை, அந்தப் பகுதியிலே புதியதாகப் பள்ளிக்கூடங்களை உருவாக்க வேண்டும். அதிலே அரசு நிச்சயமாக அந்தப் பகுதிக்கு, குறிப்பாக, அரூர் பகுதிக்கு அவர் குறிப்பிட்டதைபோல, தருமபுரி மாவட்டத்திலே பின்தங்கியிருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளிப்பதற்கு தயாராக இருக்கிறது.

மாவட்டக் கல்வி அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு மாவட்டக் கல்வி அலுவலகத்தினுடைய நிருவாக எல்லைக்குள்ளே வரக்கூடிய உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் அதைப்போல அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள், நலத் துறைப் பள்ளிகள் என்று பல்வேறுபட்ட பள்ளிகளை எடுத்துக்கொண்டால், அரூர் கோட்டத்திலே 67 பள்ளிகள் மாத்திரம் இருப்பதாக எனக்கு புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளுடைய எண்ணிக்கை வரக்கூடிய காலங்களிலே, அரசினுடைய முயற்சியின் காரணமாக, தொடர்ச்சியாக அதிகரிக்கக்கூடிய நிலையில், பல பள்ளிகள் புதிதாக உருவாக்கப்படக்கூடிய நிலையில், அவற்றினுடைய நிருவாக வசதிக்காக பிற்காலத்தில் நிதிநிலைமையையும் கருத்திலே கொண்டு அந்தத் தேவைகள் உருவாகிறபட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு அரசு முன்னுரிமை அளித்து பரிசீலிக்கும்.

2010 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கனிவான பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் எனது தொகுதியில் இன்னும் 14 கிராமங்களில், கயலாவரம், காட்டுப்பாடி, புறாக்கல்குட்டை, மாங்கனேரி, கோரையாறு, தாதர்வலைசை, கணபதிப்பட்டி, புதூர் பாரதிபுரம், மேல்செங்கம்பாடி போன்ற பகுதிகளில் துவக்கப் பள்ளிகளே முளைக்காமல் இருக்கக்கூடிய நிலைமை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்கூட சொல்லியபோது, நிச்சயமாக நான் அரூர் பகுதிக்கு வந்து நேரிலே பார்க்கின்றேன்; நாடு சுதந்திரமடைந்து 62 ஆண்டுகளாகியும் இன்றைக்கும் பள்ளிக்கூடம் துவக்காமல் இருக்கிற அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவித்தார். வரும் கல்வியாண்டிலாவது இந்த 14 கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? அதேநேரத்தில் 460 மாணவர்கள் பயிலக்கூடிய எம். தாதம்பட்டி பள்ளியைத் தரம் உயர்த்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாயும், 3 ஏக்கர் நிலமும் அளித்து 3 ஆண்டு காலமாகிறது. அங்கு ஏதோ ஒரு சூழ்நிலையால் பொதுமக்களை ஏவி, அதாவது, எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல, மாணவர்களைப் போராட்டத்தில் தள்ளுகின்ற அவல நிலைமை ஏற்பட்டது 2, 3 நாட்களாக. அங்கு மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருக்கிற அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. யாரோ, ஒரு காலத்தில் செய்த தவறுக்கு அந்த மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நான் உண்மையிலே எங்கள் அமைச்சரிடத்தில் மன்றாடி வேண்டிக்கொள்கிறேன். அந்த எம். தாதம்பட்டி பள்ளியைத் தரம் உயர்த்தி உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டும். 460 மாணவர்கள், சுற்றுவட்டார கிராமத்திலே 7, 8 கிராமங்களைத் தாண்டிச் சென்றால்தான் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று படிக்க முடியும். பெண்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி, போயர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள். ஆகவே, இந்தக் கல்வியாண்டில் அறிவிக்க இருக்கக்கூடிய பள்ளிகளில் அந்த எம். தாதம்பட்டி பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்துவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

[2010 ஏப்ரல் 23

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்த ஆண்டு புதிதாகத் துவங்கப்படக்கூடிய தொடக்கப் பள்ளிகளிலே, அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இடங்களிலே அதிக அளவிலே பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும். இதை நானே அவரிடத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவற்றை நேரடியாகப் பார்த்து, அந்தப் பகுதிகளினுடைய நிலைமையை நாங்களே நேரிலே அறிந்துகொள்ளக்கூடிய வகையிலே அங்கே ஓர் ஆய்வினை மேற்கொண்டு, தேவையான துவக்கப் பள்ளிகளை அங்கே துவக்குவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

ஆனால் அதேவேளையிலே, பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டுமென்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டங்கள் நடைபெறுவதென்பது நிச்சயமாக தேவையற்ற ஒன்று. காரணம், அரசு ஒவ்வோராண்டும் 100 பள்ளிகள், 200 பள்ளிகள் என்று திட்டமிட்டு, நிதியொதுக்கம் செய்து தரம் உயர்த்துகிறது. ஆனால், எங்களிடத்திலே வந்திருக்கக்கூடிய கோரிக்கைகள் என்பது, 200, 300, 400, 500–ஐத் தாண்டி இருக்கக்கூடிய கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றிலே மிக முக்கியமாக இருக்கக்கூடிய கோரிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் அரசு செய்ய முடியும். 100 பள்ளிகளுக்குக் கொடுக்க முடியுமென்றால், 100 பள்ளிகளுக்குத்தான் கொடுக்க முடியும். எனவே, கிடைக்காத மீதியிருக்கக்கூடிய 400 பள்ளிகளும் போராட்டத்திலே ஈடுபடுவது என்று ஆரம்பித்தால், இது எதிலே போய் முடியும்? நிச்சயமாக அது தேவையற்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை உணர்ந்து என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே நான் மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளையும் புரிந்துகொண்டிருக்கின்றேன். அவருடைய உணர்வைப் புரிந்து, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.